# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

### சாலை பாதுகாப்பு வாரதினம்

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியும், திருச்செந்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் இணைந்து 28ஆவது சாலை பாதுகாப்பு வாரதினத்தை முன்னிட்டு 27.01.2017 அன்று மாலை 3.30 மணியளவில் இரு சக்கர வாகனப் பேரணியை நடத்தினர். இப்பேரணியை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திருமதி. பாத்திமா பர்வின் தொடங்கி வைத்தார். வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியைச் சார்ந்த 43 மாணவியர் இருசக்கர வாகனங்களில் பேரணியாகச் சென்றனர். பேரணி வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியில் தொடங்கி, காயல்பட்டணம் பேருந்து நிலையத்தை அடைந்து மீண்டும் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியை வந்தடைந்தது. முதலில் கல்லூரி வாகனமும் தொடர்ந்து கல்லூரி மாணவியரின் இருசக்கர வாகனங்களும் அவற்றைத் தொடர்ந்து ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி வாகனங்களிலும் பேரணியாகச் சென்றன.

இப்பேரணியின் நோக்கமாக சாலை பாதுகாப்பு விதிமுறைகளை எவ்வாறு பேணிநடக்க வேண்டும் என்ற வாசகங்களை கோஷமிட்டவர்களாக அணிவகுத்து சென்றனர். தலைகவசம் அணிவதின் அவசியமும், அலைபேசியில் பேசிக் கொண்டு செல்வதை தவிர்ப்பதையும், இருசக்கர வாகனம் இருவருக்கு மட்டுமே என்ற உண்மையை உணர்த்தும் விதமாக இப்பேரணி நடைபெற்றது. ஓட்டுநர் உரிமம் பெறாத மாணவியர்களுக்கு உடனடியாக கற்கும் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் வழங்குவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திருமதி. பாத்திமா பர்வின் (Inspector of Motor Vehicle) உறுதியளித்தார்.

இப்பேரணியில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான், செயலர் W.M.M மொகுதஸீம் B.A., (CS) கல்லூரி, துணைச் செயலர் வாவு S.A.R அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி J. எல்லோரா M.Com., M.Phil., Ph.D., இயக்குநர் முனைவர் திருமதி. மெர்சி ஹென்றி M.A., Ph.D., கல்லூரி நிர்வாக உறுப்பினர்கள், பேராசிரியப் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்றனர். நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக அரபிக் துறைத்தலைவி திருமதி S.A.K. முத்து மொகுதூம் பாத்திமா மற்றும் உடற்கல்வி இயக்குநர் திருமதி R. அனிஷ்டா அவர்களும் இணைந்து நடத்தினர்.